**ஆயுர்வேத வைத்திய சபை – 2024**

-----------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

ஆயுர்வேத வைத்திய சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கி 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கும் உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பென்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

**. 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காள்வாளரின் பொறுப்பு**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவிலும் மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைதததுவத்தின் கருதத:துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| **(அ) 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத அதிகாரச் சட்டத்தின் III ஆம் பகுதி** | | | |
| (i) 11(1) உப பிரிவின் (உ) ஆம் பந்தி | பதிவுசெய்துள்ள ஆயுர்வேத மருந்துவர்களால் அவர்களுக்கு மத்தியில் தெரிவுசெய்து நியமிக்கப்படுகின்ற மூன்று அங்கத்தவர்கள் சபையின் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட வேண்டிய போதிலும் அந்த மூன்று அங்கத்தவர்களை நியமிப்பதற்கு | 1963 மார்ச் 15 ஆந் திகதிய 13564 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் ஆயுர்வேத ஆணையாளரினால் தேர்தல் நடாத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அதிக செலவும் நடைமுறையும் காலத்திற்கு பொருத்தமற்றதாக இருந்ததன் அடிப்படையில் | ஆயுர்வேத அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அவ்வாறு நடவடிக்கை எடுக்க முடியாத நடைமுறைச் சிக்கல்களை நீக்கி கொள்வதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். இது பல |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அது சிக்கலானதாக இருந்ததனால் 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத அதிகாரச் சட்டத்தின் உரிய பகுதியை திருத்தம் செய்வதற்கு 2022 யூன் 07 ஆந் திகதி மருத்துவ சபையினால் நிர்மானம் எடுக்கப்பட்டது. | ஆண்டுகளாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடு என்பதனால் முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும். |
| (ii) | 18(இ) மற்றும் (ஈ) பந்திகள் | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் பதிவுசெய்துள்ள தாதி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 39 ஆகவும் மருத்துவர்களின் எண்ணிக்கை 260 ஆகவும் இருந்ததுடன் பதிவுசெய்தாலினை காலரீதியாக புதுப்பிக்கும் நடைமுறை பின்பற்றப்படாதிருந்ததனால் அந்த எண்ணிக்கை நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. ஆயுர்வேத மருத்துவ துறைக்கு விசேடத்துவமான தாதி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்து பயிற்சி அளிக்கும் நடைமுறையை பின்பற்றுவதற்குப் பதிலாக மேற்கத்தைய மருத்துவ முறைமையின் கீழ் பயிற்சிகளைப் பெற்ற 100 தாதி உத்தியோகத்தர்கள் ஆயுர்வேத மருத்துவ துறைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தும் எதிர்பார்த்த மட்டத்திற்கு அதிகாரச் சட்டத்திலுள்ள குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | ஆயுர்வேதத்துறைக்கு விசேடத்துவமான தாதி உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொள்வது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டியது ஆயுர்வேத திணைக்களத்தினால் எனவும் மேற்கத்தைய தாதி பயிற்சி பாடசாலையிலிருந்து பயிற்சியினைப் பெற்றுக் கொள்கின்ற தாதி உத்தியோகத்தர்கள் ஆயுர்வேத வைத்தியசாலைக்கு சேவைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்கள் எனவும் அவர்கள் இலங்கை தாதிகள் சபையில் பதிவினைப் பெற்றிருக்க வேண்டும் என்பதனாலும் ஆயுர்வேத மருத்துவ சபையில் பதிவினைப் பெற்றிருத்தல் அத்தியவசியமற்றது என அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். ஆயுர்வேத வைத்திய சாலைக்கு சேவையாற்றுவதற்கு வருகின்ற மேறகத்தய தாதி உத்தியோத்தர்களுக்கு மூன்று மாத கால முழுநேர பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மருந்துக் கலவையாளர்களின் தகவல்களை நாளதுவரையாக்குதல் மற்றும் பதிவுசெய்து கொண்டிருக்காத மருந்துக் கலவையாளர்களை மருத்துவ சபையில் பதிவு செய்துகொள்வது | அதிகாரச்சட்டத்திலுள்ள குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அவ்வாறு நடவடிக்கை எடுக்க முடியாததான நடைமுறை சிக்கல்களை நீக்குவதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும் இது பல ஆண்டுகளாக சுட்டிக்காட்டப்பட்டுள முறைபாடுகள் என்பதனால் முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தொடர்பான தகவல்களை சேகரிப்பதற்காக அனைத்து மாகாண ஆயுர்வேத வைத்தியசாலைகளின் பணிப்பாளர்களுக்கும் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் தகவல்களைப் பெற்றதன் பின்னர் அதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதற்கிணங்க 2025 ஆம் ஆண்டின் போது ஆயுர்வேத தாதிகள், ஆயுர்வேத மருந்துக் கலவையாளர்கள், மற்றும் மசாஜ் சிகிச்சையாளர்களை பதிவுசெய்வது தொடர்பான சட்ட விதிகளைத் தயாரித்து அவர்களின் பதிவினை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (iii) | 19(1) உப பிரிவின் (அ) பந்தி | சபையினால் அச்சபையின் செயலாளராகவும் ஆளணியினரின் பிரதான உத்தியோகத்தராகவும் செயற்பட வேண்டிய ஒரு செயலாளர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் அப்பதவிக்கு நிரந்தர அடிப்படையில் ஒரு செயலாளரினை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது ஒப்பந்த மற்றும் பதில் கடமை பார்க்கும் அடிப்படையில் தொடர்ச்சியாக ஆட்சேர்த்தல் மேற்கொள்ளப்பட்டது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2011 மே 23 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் ஆயுர்வேத மருத்துவ சபைக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆளணியினை மீளமைப்புச் செய்யும் பிரேரணைக்கு இணங்க பதிவாளர் (ஒப்பந்த அடிப்படை) பதவி அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும் ஆயுர்வேத மருத்துவ சபையின் தலைவரினால் 2024 மார்ச் 01 ஆம் திகதிய 2373/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்ட விதியின் 2 ஆம் இலக்கத்தின் கீழ் காட்டப்பட்டுள்ள ஆயுர்வேத மருத்துவ சபையின் பதிவாளரினைச் சேர்த்துக்கொள்வதற்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறையினைத் தயாரிப்பதந்காக HM 1-1 சம்பளக் குறியீட்டினை வேண்டி | இந்த நடைமுறையானது கடந்த பல ஆண்டுகளாக அமுல்ப்படுத்தப்படுகின்ற போதிலும் இது வரை போதியளவு செயல்முன்னேற்றம் காட்டப்பட்டிருக்காததனால் ஆயுர்வேத அதிகாரச் சட்டத்திற்கு இணங்க துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அனுப்பிவைக்கப்பட்ட கடிதம் 2025 சனவரி 03 ஆந் திகதி சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சின் செயலாளரால் சிபாரிசு செய்யப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் பதிலின் பிரகாரம் ஆயுர்வேத மருத்துவ சபையின் பதிவாளரினை சேர்த்துக்கொள்ளும் நடைமுறையினை தயாரித்து அங்கீகாரத்திற்காக அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| **(ஆ)** | **2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம்** | | | |
| (i) | 38(1) உப பிரிவின் (இ) பந்தி | சபையின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகின்றது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அந்த முறைமையின் வினைத்திறன் தொடர்பாக காலத்துக்கு காலம் மீாய்வு செய்து அதற்கிணங்க முறைமையை வினைத்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்படவில்லை. | ஆயுர்வேத மருத்துவ சபையானது சிறிய ஆளணியினரையும் வருடாந்தம் கொடுப்பனவு வவுச்சர்கள் 500-600 அளவிலான கொடுக்கல் வாங்கல்களையும் கொண்ட ஒரு நிறுவனம், தற்பொழுது இதன் நிதி நடவடிக்கைகளின் கண்காணிப்பானது ஆயுர்வேதத் திணைக்களத்தின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படுவதுடன் சபையின் நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக நிதி உதவியாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். விசேடமாக காலாண்டு மட்டத்தில் நடாத்தப்படுகின்ற கணக்காய்வுக் குழுவின் மூலமும் ஆயுர்வேத மருத்துவ சபைக்கு | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தீன் 38(1) ஆம் உப பிரிவின் (இ) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமான பிரேரணைகள் சமர்ப்பிக்கப்படுவதுடன் அதன் மூலம் முறைமையினை வினைத்திறனாக மேற்கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. | |
| | (ii) | 38(2) ஆம் உப பிரிவு | அதிகாரச் சட்டத்தின் 38(1) ஆம் உப பிரிவின் (இ) பந்தியின் பிரகாரம் மீளாய்வினை எழுத்துமூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டிலிருந்து உரிய பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1) ஆம் உப பிரிவின் (இ) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (iii) | 40 ஆம் பிரிவு | கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்தின் நிருவாக சபையினால் உரிய முறைமையில் நியமிக்கப்படுகின்ற தமக்கே உரியதான ஒரு உள்ளகக் கணக்காள்வார் இருக்க வேண்டிய போதிலும் ஆயுர்வேத மருத்துவ சபைக்கு ஒரு உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டிருக்காததுடன் ஆயுர்வேத திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் சபையின் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும் மீளாய்வாண்டில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆயுர்வேதத் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் தயாரிக்கப்படுகின்ற கணக்காய்வுத் திட்டத்தில் ஆயுர்வேத மருத்துவ சபை தொடர்பான நடவடிக்கைகளை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2018 இக் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2014 ஒக்தோபர் 15 ஆந் திகதிய | | சபையில் பதிவுசெய்துள்ள அனைத்து மருத்துவர்களும் 05 | இது சம்பந்தமாக அச்சு ஊடகங்கள் மற்றும் மாகாண ஆயுர்வேத | வெளியிட்டப்பட்ட ஆயுர்வேத மருத்துவ சபை சட்ட |

| | | | |
|---|---|---|---|
| 1884.:.36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஆயுர்வேத மருத்துவ சபை சட்ட விதி | ஆண்டுகளுக்கு ஒரு தடவை தமது பதிவினை புதுப்பிக்க வேண்டிய போதிலும் 2024 திசெம்பர 31 ஆந் திகதி வரை 05 ஆண்டுகளை மிகைத்த 585 மருத்துவர்கள் பதிவினை புதுப்பித்திருக்கவில்லை. | ஆணையாளர்கள் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கிணங்க பதிவினைப் புதுப்பிக்காத மருத்துவர்களின் பெயர்ப்பட்டியலினை மாவட்ட மட்டத்தில் தயாரித்து மாகாண ஆயுர்வேத ஆணையாளர்களின் மூலம் அவர்களுககு தெரியப்படுத்தி பதிவினைப் புதுப்பிப்பதற்காக தொடர்புபடுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்களின் வருடாந்த செயலாற்றலினை மேற்கொள்ளும் போது 2024 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுகின்ற பதிவுசெய்துள்ள ஒரு மருத்துவர் என்பதனை உறுதிப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அவ்வாறே பதிவினை புதுப்பித்தல் மற்றும் மரணமடைந்த மருத்துவர்கள் தொடர்பான தகவல்களை மருத்துவ சபைக்கு அறிக்கையிடுவதற்காக சுகாதார அமைச்சின் சுதேச மருத்துவ பிரிவின் கீழ் சேவையில் ஈடுபட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் கடமைப் பட்டியலுக்கு அந்த விடயங்களை உள்ளடக்குவதற்காக தேவையான நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சிற்கு எழுத்துமூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நடைமுறையினை அமுல்ப்படுத்துவது தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதில் செயல்முன்னேற்றம் காணப்படுகின்றது. | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பதிவுசெய்வதனை ஊக்குவித்தல் மற்றும் பதிவினை புதுப்பிக்கும் வருமானத்தை சேகரிப்பதற்காக பொருத்தமான நடைமுறை பின்பற்றப்படுதல் வேண்டும். |

## 1.6 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையின் வங்கி நடைமுறைக் கணக்கில் ரூபா 07 மில்லியனுக்கும் 14 மில்லியனுக்கும் இடைப்பட்ட ஒரு மீதி மீளாய்வாண்டின் ஒவ்வொரு மாத இறுதியிலும் காணப்பட்டதுடன் சராசரி நாளாந்த கொடுக்கல் வாங்கல் தேவைப்பாட்டினை நிறுத்தி வைத்து மிகுதிப் பணத்தை முதலீடு செய்வது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆயுர்வேத மருத்துவ சபையின் 2024 பெப்ரவரி 13 ஆந் திகதிய தீர்மானத்தின் பிரகாரம் கணனி, கணனி அச்சு இயந்திரம் மற்றும் துணைக்கருவிகளை கொள்வனவு செய்தல், அலுவலகத்தின் யன்னலுக்கு கிரீல் பொருத்துதல், ஆவணக் காப்பகத்தினை தயாரித்தல், ஆயுர்வேத மருத்துவ சபைக் கட்டிடத்தின் முன்பாக கூரையினைத் தயார்படுத்துதல், ஆயுர்வேத மருத்துவ சபை கட்டிடத்தின் முன்பாக பூந்தோட்டத்தை (Garden) தயார்படுத்துதல் முதலிய நடவடிக்கைகளுக்காக அண்ணளவான மதிப்பீடாக ரூபா 9,907,856 பணம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதற்கிணஙக் அந்த நடவடிக்கைகள் சபையில் காணப்படுகின்ற நிதி நிலைமையின் அடிப்படையில் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதற்கிணங்க கணணிகளைக் கொள்வனவு செய்வதற்கு மற்றும் ஆவணக் காப்பகத்தினை தயாரிப்பதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் சபை கலைக்கப்பட்டுள்ளதனால் 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. அந்த நடவடிக்கைகளை | நிறுவனம் எதிர்காலத்தில் நிரந்தரமாக நிலைத்திருப்பதற்காக முதலீட்டுச் சொத்துக்களை கட்டியெழுப்புவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மேற்கொள்வதற்காக சபையின் பணத்தை ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதனால் ஏனைய முதலீட்டுச் சொத்துக்களை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நிறுவனம் எதிர்காலத்தில் நிரந்தரமாக நிலைத்திருப்பதற்காக முதலீட்டுச் சொத்துக்களை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.<br><br>புலனாய்வுகள் முடிவுறுத்தப்படாத முறைப்பாடுகள் தொடர்பாக 2025 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்படும். | |

**2. செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ஆயுர்வேத மருத்துவ சபையில் பதிவுசெய்துள்ள மருத்துவர்களின் தொழில்சார் தவறான நடத்தைகள் சம்பந்தமாக 2023 ஆம் ஆண்டு தொடர்பாக ஒரு முறைப்பாடு மற்றும் 2024 ஆம் ஆண்டில் பெற்ற 11 முறைப்பாடுகளில் 07 முறைப்பாடுகளின் புலன் விசாரணைகள் முடிவடைந்திருக்கவில்லை. | புலன்விசாரணைகள் முடிவுறுத்தப்படாத முறைப்பாடுகள் தொடர்பாக 2025 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்படும். | அனைத்து முறைபபாடுகளையும் புலன் விசாரணை செய்து தேவையான மேலதிக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் முறைப்பாடுகள் சம்பந்தமாக பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் மற்றும் காலரீதியாக அதன் செயல்முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்யக்கூடிய வகையில் முழுமையான தகவல்கள் பேணப்படுதல் வேண்டும். பொலிசிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத அதிகாரச்சட்டத்தின் 20(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆயுர்வேத மருத்துவ சபை ஒரு கூட்டுத்தாபனம் என்பதனால் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்திற்கு இணங்க நிதிக் கட்டுப்பாடு மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் முறையான மேற்பார்வையுடன் கணக்கீட்டு பிரிவினை ஸ்தாபித்தல் தொடர்பாக கட்டுப்பாட்டுச் சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது இது தொடர்பாக சபை கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | முறையான மேற்பார்வையுடன் கணக்கீட்டுப் பிரிவு ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும். |

## 2.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் ஆகக்குறைந்தது 03 ஆண்டுகள் காலத்திற்கு எதிர்பார்த்த பெறுகை நடவடிக்கைகள் பட்டியல்படுத்தப்பட்டு பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டிலிருந்து இதற்கிணங்க நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

## 3.1 தந்திரோபாயத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவகரீதியான கட்டுப்பாடு தொடர்பான வழிகாட்டிக் கோவையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் தயாரிக்கவேண்டிய தந்திரோபாயத் திட்டம் மேற்கூறிய ஒழுங்குவிதிகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க தொழில் முயற்சிகளின் நிறுவக ரீதியான கட்டுப்பாடு தொடர்பான வழிகாட்டிக் கோவையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் தந்திரோபாயத் திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்க தொழில் முயற்சிகளின் நிறுவகரீதியான கட்டுப்பாடு தொடர்பான வழிகாட்டிக் கோவையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் தந்திரோபாயத் திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |